**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**OS No: 209/2022** **தேதி: 19.06.2026**

**வா.சா.10 – குருவையா**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் இந்த வழக்கில் ஏற்கனவே என்னுடைய சாட்சியத்தை அளித்துள்ளேன். தற்போது அழைப்பாணையில் கோரிய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்து சம்பந்தமாக விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் அனுப்பிய அறிவிப்பு **சா.சா.ஆ 18**. மனுதாரர் ராஜசேகரன், ஆனந்த், பாண்டியன் மற்றும் எதிர்மனுதாரர்கள் ராஜேந்திரன், தேவராஜ் ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

**<u>1, 2, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சா.சா.ஆ 18 ல் அறிவிப்பானது மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு மட்டும் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் உண்மையான உரிமையாளருக்கும், வாரிசுதாரர்களுக்கும் விசாரணைக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. உரிய விசாரணை இல்லாமல் ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அது செல்லத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

## 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.